## க.பொ.த (சா. தரம்) உதவிக் கருத்தரங்கு - 2013

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

## விடையளித்தல் தொடர்பான வழிகாட்டி

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 1 | 2 |
| 2 | 3 |
| 3 | 2 |
| 4 | 2 |
| 5 | 4 |
| 6 | 2 |
| 7 | 1 |
| 8 | 4 |
| 9 | 3 |
| 10 | 1 |
| 11 | 2 |
| 12 | 4 |
| 13 | 3 |
| 14 | 2 |
| 15 | 1 |
| 16 | 4 |
| 17 | 2 |
| 18 | 1 |
| 19 | 3 |
| 20 | 1 |

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 21 | 4 |
| 22 | 2 |
| 23 | 1 |
| 24 | 3 |
| 25 | 4 |
| 26 | 3 |
| 27 | 1 |
| 28 | 2 |
| 29 | 2 |
| 30 | 4 |
| 31 | 4 |
| 32 | 3 |
| 33 | 1 |
| 34 | 4 |
| 35 | 2 |
| 36 | 1 |
| 37 | 4 |
| 38 | 3 |
| 39 | 3 |
| 40 | 2 |

[பக். 2 ஐப் பார்க்க

# க.பொ.த (சா. தரம்) 2013

# உதவிக் கருத்தரங்கு

# தமிழ் மொழியும் இலக்கியமும் II

# விடையளித்தல் தொடர்பான வழிகாட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| வினா | 01 | சுருக்க விடைகள் | - | 20 புள்ளிகள் |
| | 02 | கட்டுரை | - | 25 புள்ளிகள் |
| | 03 | சுருக்கம் | - | 10 புள்ளிகள் |
| | 04 | கிரகித்தல் - கவிதை | - | 10 புள்ளிகள் |
| | 05 | துண்டுப்பிரசுரம்/ கடிதம் | - | 15 புள்ளிகள் |
| | | | - | **80 புள்ளிகள்** |

**வினா இல 01**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i) தாழ் மதவேழம் ஒன்று ஆழ்கயம் இறங்கி

(ii) பெயர் : கறையான்
வினை : போ

(iii) நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்பு இருபத்தைந்தாம் (இருபத்து ஐந்தாம்) மலையிலே கொழுந்து எடுத்தாயே

(iv) அகப்புணர்ச்சி - ஓடினான் - ஓடு + இன் + ஆன்
புறப்புணர்ச்சி - மாணவர்கள் + எல்லோரும் + விளையாடினார்கள்
} இவை போன்ற பொருத்தமான விடைகள்

(v) புலவர்கள் ஐவர் கவிதா நிகழ்விற் பங்குபற்றினர்.
புலவர்கள் -
ஐந்து -
} உயர்திணைப் பெயர்கள் வருமிடத்து ஐவர், மூவர், இருவர் என்று பயன்படுத்தப்படுவது பொருத்தமாகும்.

(vi) அடங்கு - அடக்கு
திருந்து - திருத்து

(vii) இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருத்தல்
கருத்துக்களைப் பிரதிபலித்தல்
பல தேவைகளுக்குப் பயன்படல்
பல ஊடகங்களில் பலமுறை பயன்படல்
(ஏதாவது இரண்டு)

(viii) குறித்த ஒருவரைச் சுட்டிக் காட்டி எழுதும் திறன்.
அறிவுறுத்தல் பாங்கில் எழுதுதல்

(ix) அன்றி

(x) கடவுள் வாழ்த்து
சபை வணக்கம்
கதை ஆரம்பம்
கதை வளர்ச்சி
முடிவு
சபையோருக்கு நன்றி கூறி மங்களம் பாடுதல்.

**(2 ×10 = 20 புள்ளிகள்)**

[ பக். 3 ஐப் பார்க்க

**வினா இல 02**

**(அ) விளக்கக் கட்டுரை**

**புள்ளித்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| அ. | பொருளமைவும் அளவும் | - | 12 புள்ளிகள் |
| ஆ. | கருத்து வெளிப்பாடும் மொழிச்செம்மையும் | - | 06 புள்ளிகள் |
| இ. | கட்டுரை நுட்பங்கள் | - | 05 புள்ளிகள் |
| ஈ. | தலையங்கம் | - | 02 புள்ளிகள் |
| | | | **25 புள்ளிகள்** |

**கட்டுரைக்கான விடயக் குறிப்புகள் (இங்கு தரப்பட்டுள்ள விடயக் குறிப்புகளோடு பொருத்தமான வேறு அம்சங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.)**

**முகவுரை**

- எரிபொருள் பற்றிய விளக்கம்
  (பெற்றோல், டீசல், விறகு, மின்சாரம் ஏனையவை)
- எரி பொருட்களின் பயன்பாடும் மனித வாழ்வில் பெறுகின்ற முக்கியத்துவமும்.

**தொடருரை**

- உலக நாடுகளில், எரிபொருளில் ஏற்படும் விலை மாற்றங்கள் / விலைமாற்றத்தளம்பல் நிலை
- இவை நமது நாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களும் அரசு எடுக்கும் நடவடிக்கைகளும்
- இதனைப் பயன்படுத்துவோரின் வாழ்வில் ஏற்படும் பாதிப்புக்கள்
- கட்டாய தேவைகளுக்காக மட்டும் பயன்படுத்துதல் பற்றிய அவசியத்தை விபரித்தல்

**முடிவுரை**

1. இக்கருத்துக்களைத் தொகுத்துக்கூறுதல், சொந்தக் கருத்துக்களை முன் வைத்தல், சவாலாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படல்

**(ஆ) உரையாடல்**

**இளைஞர் சமுதாயம் வெளிநாடு செல்வது........**

- இருவருக்கு இடையிலான உரையாடல் பாங்கில் அமைந்திருத்தல்
- பேச்சு மொழியிலும் உரையாடல் அமையலாம்
- ஒவ்வோர் உரைக்குமிடையே தொடர்பு காணப்படல்
- சிறுசிறு வாக்கியங்களில் அமைந்திருத்தல்
- உரையாடல் பிரதான விடயத்தோடு தொடர்புபட்டிருத்தல்
- ஆரம்பம் சுவையானதாகவும் சுமுகமானதாகவும் அமைந்திருத்தல்.

**உள்ளடக்கம்**

- இளைஞர் சமுதாயம் வெளிநாடு செல்லல், வெளிநாடு செல்வதை விரும்பாதுவிடல், எமது நாட்டுக்கு உழைத்தல் பற்றியும் அவற்றை தொடர்புபடுத்தியும் உரையாடல்
- இளைஞர் சமுதாயம் வெளிநாடு செல்வதை விடுத்து நாடு வளம் பெற உழைத்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி உடன்பாடான உரையாடலாக நிறைவு பெறுதல் வேண்டும்.

(உரையாடலின் போது குறைபாடுகளும் எடுத்துக் காட்டப்படலாம்)

[ பக். 4 ஐப் பார்க்க

**(இ) மேடைப்பேச்சு**
**மீள உற்பத்தி செய்ய முடியாத வளங்கள்...........**

- சொற்பொழிவு வடிவம் இருத்தல் வேண்டும்.
- சபையோரை விளித்துப் பேசுதல்.
- தர்க்க ரீதியாகக் கருத்துக்களை முன் வைத்தல்.
- தொகுத்துரைத்து நிறைவு செய்தல் வேண்டும்.
- சொற்பொழிவில் இடம்பெற வேண்டியவை
    1. மீள்உற்பத்தி செய்ய முடியாத வளங்களுள் நீரின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குதல்.
    2. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் பற்றி விபரித்தல்.
    3. கடல் நீரை நன்னீராக்குதல் பற்றிய கருத்துக்களை முன்வைத்தல்
    4. இவை போன்ற நடவடிக்கைகளால் வெற்றி பெறலாம் என்ற கருத்தை வலியுறுத்தி சொற்பொழிவை நிறைவு செய்தல்.

**(ஈ) சிறுகதை**
**நாகரிக மோகம்........**

- பொருத்தமான தலைப்பிடல்.
- சிறுகதைக்குரிய அமைப்பு இருத்தல்
- வழங்கப்பட்ட குறிப்பிற்கு அமைய கற்பனையாக எழுதப்படல்
- கதைக் கருவினை சுவைபட நகர்த்திச் செல்லல்.
- பொருத்தமான மொழிநடை கையாளப்படல்.
- அன்பின் சக்தி வலியுறுத்தப்படல்.

**வினா இல 03**
**சுருக்கம்**

- பிரதான கருத்து, துணைக் கருத்துக்கள்
- சொந்த மொழிநடையில் எழுதுதல்
- கருத்துச் சிதைவின்றி எழுதுதல்
- தவிர்க்க வேண்டியன தவிர்க்கப்படல்
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படல்
- ஒரு பந்தியாக எழுதுதல்
- நேர்கூற்று வாக்கியத்தை பிறர் கூற்றாக மாற்றி எழுதுதல்.
- குறித்த சொல்லளவில் எழுதுதல் (40 - 45 சொற்கள்)
- எழுதிய சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடல்.

**முக்கிய கருத்துக்கள்**

- வ. வே. சு. ஐயர் தமிழின் முதல் சிறுகதை ஆசிரியர்
- அவரின் உயிர்மூச்சாக இருந்தவை கலை, வீரம், விடுதலை
- வ. வே. சு. ஐயர் தமது காசி யாத்திரையின்போது மேற்கொண்ட இரு உறுதி மொழிகள்.
- இந்திய விடுதலைக்கு தமது வாழ்வை அர்ப்பணித்தமை.
- தமிழ் கலை வளர்ச்சிக்கு குருகுலம் நிறுவியமை.
- தமது உறுதி மொழிகள் பற்றி அவர் கூறியவை.

**(10 புள்ளிகள்)**

[ பக். 5 ஐப் பார்க்க

**வினா இல 04**

(i) பிறருக்கு அடிபணிந்து/ தலை குனிந்து நடத்தலையே கவிஞர் சிறுமைக் குணம் என்கிறார்.

(ii) இவ்வுலகில் வறுமையில் வாழ்ந்தாலும் வளமும், புகழும், பெருமையும் கொண்டு வாழ்ந்தவர்கள் வாழ்வைப் பாடமாகக் கொள்ள வேண்டும்.

(iii) துன்பம் வரும் போது துணிவை துணையாகக் கொள்ள வேண்டும்.

(iii) உவமை அணி - இன்பம் துன்பம் வாழ்வினிலே இரவு பகலைப் போல வருமே

உருவக அணி - வறுமைப் புயல்

(v) வறுமையில் அல்லற்பட்டாலும் துணிவைத் துணையாகக் கொண்டு உயர்ந்திடல் வேண்டும்.

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

**வினா இல 05**

**துண்டுப்பிரசுரம்**

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 04 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 08 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| | | **15 புள்ளிகள்** |

- **அமைப்பு**
    - கவர்ச்சியான தலைப்பு
    - பொதுவான விளிப்பு
    - விடய விவரிப்பு
    - வெளியிடுபவரின் பெயர் முகவரி
    - வாசிப்புப் பழக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுதல்.

- **உள்ளடக்கம்**
    - வாசிக்க வேண்டிய நல்ல நூல்களின் வகைகள்.
    - வாசிப்பதன் மூலம் பெறும் பயன்கள்.
    - நண்பர்கள் போல நூல்கள் அமைந்திருப்பதை முக்கியப்படுத்தல்.
      (சொல்லளவு கருத்திற் கொள்ளப்படல்)

- **மொழிநடை**
    - கவர்ச்சியான நடை
    - சிறு சிறு வாக்கியங்கள் பயன்படுத்தப்படல்.

**அல்லது**

**கடிதம்**

- **அமைப்பு**
    - தொழில்முறைக் கடிதத்திற்கு பொருத்தமான வகையில் இடம் பெறல்.

- **உள்ளடக்கம்**
    - விளம்பரம் பற்றிய குறிப்பு

      சுயவிபரம், கல்வித்தகைமை, அனுபவம் பற்றிய விபரம்.
      (சொல்லளவு கருத்திற் கொள்ளப்படல்)

- **மொழி நடை**
    - உத்தியோகபூர்வ கடிதத்திற்குரிய பொருத்தமான செம்மையான நடை, பொருத்தமான சொற்பிரயோகம்.

* * *

# க.பொ.த (சா. தரம்) 2013
# உதவிக் கருத்தரங்கு
# தமிழ் மொழியும் இலக்கியமும் III
# விடையளித்தல் தொடர்பான வழிகாட்டி

கட்டாய வினாக்கள்

வினா 01 சுருக்க விடைகள் 2 x 10 புள்ளிகள் = 20 புள்ளிகள்

02 செய்யுள் + உரைநடை

அ, ஆ, இ, ஈ ஒவ்வொன்றுக்கும் பின்வருமாறு புள்ளி வழங்குக.

| | | | |
|---|---|---|---|
| (1) | பொருள் எழுதுதல் | | 03 புள்ளிகள் |
| (2) | தொடரின் சிறப்புக் கூறல் | | 02 புள்ளிகள் |
| | மொத்தம் | | 05 புள்ளிகள் |
| | 5 x 4 | = | 20 புள்ளிகள் |
| (3) | செய்யுட் பகுதி | | 15 புள்ளிகள் |
| (4) | உரைநடைப் பகுதி | | 15 புள்ளிகள் |

தெரிவு வினாக்கள்

| | |
|---|---|
| வினா 05, 06, 07 (ஏதேனும் ஒன்று) | 10 புள்ளிகள் |
| | 80 புள்ளிகள் |

**வினா இல 01**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i) ஈன்றாளோடு எண்ண கடவுளும் இல்

(ii) உலகவாம் பேரறிவாளன் திரு. ஊருணி நீர்நிறைந் தற்றே

(iii) பல்லவரால், குலோத்துங்க சோழனுக்கு (சோழன் என்பது பிழையான விடை)

(iv) மீனவ சமூகத்தினர் எவ்வளவு தான் கஷ்டப்பட்டாலும் அதன் பயனை அனுபவிப்பதில்லை./ அவர்களுடைய உழைப்பு சுரண்டப்படுதல்.

(v) இன்பமோ துன்பமோ நல்லதோ கெட்டதோ ஒரு முடிவு வரின் பேதலிக்கும் மனம் நிம்மதியடையும்.

(vi) வெற்றிவேலாக உவமிக்கப்படுகிறது.

(vii) பாடுபொருள் பெண்ணிலா ஊரில் பிறந்தவர் போல துன்பம் தரு நிலை.
துணைக்கருத்து - நந்தி வர்மனின் கொடைச் சிறப்பு

(viii) ஈதல் / கொடை கொடுத்தல், விருந்தோம்பல்

(ix) பழமொழிநானூறு, நான்மணிக்கடிகை

(x) காணி..... மனநிறைவு என்னும் பொருள்பற்றி பிற மொழியாளர் எழுதிய பாடல் எதுவும் "காணி நிலம்.... வேண்டும் என்னும் பாடலுக்கு இணையாகாது.

(2 × 10 = 20 புள்ளிகள்)

[ பக். 2 ஐப் பார்க்க

**வினா இல 02**

**2.** அ. **பொருள்** : பெண்களின் கண்களின்றும் நீர் பெருகும்படியாக மழை பொழிகின்ற கார்காலம். மன்மதன் வில்லை வளைக்க மயில்கள் ஆடுகின்ற காலம், பெண்களின் மார்பகங்களும் கொன்றை மரங்களும் பொன்னைச் சொரிகின்ற காலம், தாமரைகளும் முல்லைகளும் தமது அரும்புகள் மலர்ந்து சிரிக்கின்ற காலம், தனது செம்மையான கையினால் முகில் போல் செம் பொன்னைப் பொழிகின்ற ஒப்பற்ற தியாகியாகிய நந்திவர்மனின் காதல் பெண்களுக்கு கிட்டாத காலம், எனது உயிர் அங்கும், உடல் இங்குமாக அமைந்த கார்காலம், இருவரையும் தனித்தனியானவர்களாக செய்த கொடிய காலம்.

**சிறப்பு** : நந்திவர்மனது பிரதியுபகாரம் கருதாத கொடையும் தியாக உணர்வும் உவமை அணி மூலம் சிறப்பிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| உவமானம் | - | முகில் |
| உவமேயம் | - | கொடை |
| பொதுத்தன்மை | - | எல்லையற்றது. |

எதையும் எதிர்பாராமல், எல்லையற்று கொடுக்கும் முகிலுக்கு நந்திவர்மனது கொடை உவமிக்கப்படுகின்றது. பிரதியுபகாரம் கருதாத கொடையாகையால் அதை செய்கின்ற நந்திவர்மன் ஏகத்தியாகி ஒப்பற்ற தியாகியாகின்றான்.

ஆ. **பொருள்** : என் காவலுக்கு அடங்கியிரு என்று சொல்லி எனது அன்னை, காவலுள்ள வீட்டினுள் வைத்து, கதவுகளின் இசைப்பு பொருந்த அடைத்த பின் உலா வரும் பாண்டிய மன்னனின் அழகைக் காண்பதற்காக கதவில் துளையிட்ட தச்சனுக்கு என்ன கைம்மாறு செய்வேன் தோழி

**சிறப்பு** : தான் பாண்டிய மன்னனைக் காண்பதற்காக கதவில் துளை போட்ட தச்சனுக்கு, காலத்தினால் செய்த உதவிக்கு நன்றி கூறும் தலைவியின் காதல்வயப்பட்ட உள்ளம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

இ. **பொருள்** : செல்வம் நிறைந்த அறிவிலிகள் நிலத்திற்கு சுமையாகவும், உலகத்திற்கு உற்ற பழியாகவும் அமைந்திருப்பதால் அவர்கள் அழிந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மையுடையதாகும். அறிவுடைய செல்வரை உலகம் போற்றும்., அறிவற்ற செல்வரை தூற்றும். அறிவுடைய செல்வன் தன் பொருளை ஏற்றவாறு பயன்படுத்தி இவ்வுலகில் புகழும், மறுவுலகில் இன்பமும் அடைவான்.

**சிறப்பு** : நல்லார் கைப்பட செல்வந்தரின் சிறப்பு எடுத்துக் காட்டப்படுகின்றது. செல்வத்தை ஏற்றவாறு பயன்படுத்தும் அறிவுடையவனே இவ்வுலகிலும் மறுவுலகிலும் நன்மை அடைவான்.

ஈ. **பொருள்** : வான்மீகி ஒரு தெய்வக் கவிஞர். அவர் இயற்றிய காவியம் திருப்பாற்கடல். பாற்கடல் முழுவதையும் பருகுவதற்கு ஒரு பூனையால் முடியுமா! நீங்களோ அந்தப் பெருநூலை தமிழில் மொழிப்பெயர்க்க வேண்டும் என்கிறீர்கள். என்னால் முடியக்கூடிய விடயமா அது? கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றலாம்.

**சிறப்பு** : வான்மீகி மிகச்சிறந்த ஒரு கவிஞர். கம்பரின் அவையடக்கம் எடுத்துக்காட்டப்படுகின்றது. இராமாயணத்தை திருப்பாற்கடலாகவும், கம்பர் தம்மைப் பூனையாகவும் உருவகித்துள்ளார். வான்மீகி இராமாயணத்தின் பெருமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

(5 × 4 = 20 புள்ளிகள்)

[ பக். 3 ஐப் பார்க்க

**வினா இல 03**

**3.** **இயற்கை மீது ஆசிரியரின் ஈடுபாடு**

i. கதையின் ஆரம்பம்......... மண்ணுலக ரோஹிணி, விண்ணுலக ரோஹிணி
ii. மாலைப் பொழுதின் வர்ணனை
iii. குழந்தையின் கற்பனை, சிந்தனைகளை இயற்கையுடன் ஒப்பிடல்
iv. வானம், பூமியை உன்னிப்பாக அவதானித்தல்
v. நக்ஷசத்திரம் தோன்றுவதால் இயற்கை அழகுபெறல், நக்ஷசத்திரம் விழுவதால் இயற்கை அழகு குறைதல்

இவ்வாறான எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கப்படல் சிறந்தது.

**அல்லது**

**தந்தையின் ஆளுமையை சித்திரிப்பதில் விமலனின் பாத்திரப்படைப்பின் முக்கியத்துவம்:**

i. சமூகத்திலும், குடும்பத்திலும் தந்தை பெற்றிருந்த மதிப்பைக் கண்டு பெருமிதம் அடைதல்.
ii. டாக்டர் முன் அவமதிக்கப்படும் போது அதிர்ச்சி அடைதல் (கிராம சேவகர், போஸ்ற் மாஸ்டர், ஐயர்)
   - காதுகளைப் பொத்துதல்
   - பிடுங்கப்பட்ட செடி போல் சோர்ந்து போதல்.
   - அப்பா பெரியவர் யாரப்பா? நீங்களா என்ற வினா
iii. தந்தையைப் பற்றி விமலனின் எண்ணங்கள்
   - அம்மா பற்றி அப்பா கூறுவது.
   - தமிழறிவை எண்ணி பெருமைப்படல்
   - பல்வேறு விடயங்களை மகனுக்கு விளக்குதல்.

(15 புள்ளிகள்)

**வினா இல 04**

**4.** (அ)
- கூத்தர் தம்மைத் தாமே இகழ்ந்து கூறல்
   - கவிச்சக்கரவர்த்தி பதவி........ சோழரின் வித்யாகுரு.....!
     போகட்டும் எல்லாம் போகட்டும்.
- ஓலைச் சுவடிகளைக் கிழித்தெறிதல்
- கம்பர் அழைத்தபோது அளித்த பதில்கள்
   - என்னை விட்டுவிடும் நான் சாகின்றேன்.....
   - மலரீயூர்க்கூத்தன் உம்மை என்னால் வெல்ல முடியாது.
   - கலைமகள் எனக்கு திருவருள் செய்கிறாள். உமக்கோ குற்றேவல் செய்கின்றாள்.
- நீ தோல்வியடைவதற்குக் கூட என்னை எதிர்க்க அனுமதிக்க மாட்டேன்.

(08 புள்ளிகள்)

(ஆ)
- ஏர் எழுபது நூல் பற்றிய உரையாடல்.
- குழலோசை பற்றி பாராட்டும் போது.
- இராமாயணம் இயற்றல் தொடர்பான உரையாடலில்
- குமுதன் இட்ட குலவரை என்ற பாடலைப் பாடிய போது.
- தூமி என்ற சொல்லை கம்பர் சிருஷ்டித்ததாக இருக்கட்டும் என்ற போது.

(4 புள்ளிகள்)

[ பக். 4 ஐப் பார்க்க

(இ) மருதப்பன், கணபதி, ஞானசம்பந்தர் உரையாடலில்

- நேமிநாதம் நூல் பற்றி....
- கம்பர் - ஒட்டக்கூத்தர் பற்றி
- சோழன் புலவர்களை அழைத்து கௌரவிப்பதால் மகிழ்தல்.

(3 புள்ளிகள்)

(8 + 4 + 3 = 15 புள்ளிகள்)

**அல்லது**

(அ)
- அவரவர் செயல்படி இறைவனை வணங்கல்
- பசுவினைப் பாதுகாத்தல்
- ஈகை அறங்களைச் செய்தல்
- எல்லோரிடமும் இன்சொல் பேசி ஒழுகுதல்
(யாவர்க்குமாம் இறைவற்கொரு....... பாடல்)

(5 புள்ளிகள்)

(ஆ)
- தலைமுடியை ஒழுங்குபடுத்துவதால் வரும் முடியின் அழகு
- கரைபோட்ட ஆடையின் அழகு
- மஞ்சள் பூசுவதால் வரும் முகத்தின் அழகு

(5 புள்ளிகள்)

(இ) சீமைத்துணி - நாட்டுப்புடைவை
மட்பாண்டங்கள் - செம்புக்கலங்கள், பித்தளைக் கலங்கள்
இவற்றை ஒப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

(5 புள்ளிகள்)
(3 x 5 = 15 புள்ளிகள்)

**வினா இல 05**

**5.** அ. சூசிகை - ஆரம்பகால சிறுகதை ஆதலால் வாசகருக்கு இலகுவில் விளக்கம் ஏற்படுத்துதல்.
(3 புள்ளிகள்)

ஆ.
- சிறுகதை அமைப்பை பேணி எழுதப்பட்டிருத்தல்
- சூசிகை மூலம் விளக்கம் கொடுத்தல்.
- மொழி நடை - செந்தமிழ் நடை.
- அணிகள் கையாளப்பட்டுள்ளமை. - உதாரணம் காட்டப்படல்.

(4 புள்ளிகள்)

இ. தமிழுக்கு சிறுகதை அறிமுகமான காலம்.
அரச, புராண, பழைய மரபுக்கதைகள் செல்வாக்கு செலுத்திய காலம்.

(3 புள்ளிகள்)
(3 + 4 + 3 = 10 புள்ளிகள்)

[ பக். 5 ஐப் பார்க்க

**வினா இல 06**

**6.** **அ.** • காதலனின் தோற்றத்தைக் கண்டு பெருமைப்படல்
- காலிலேயும் வெள்ளி மிஞ்சி.......

• செயற்பாடுகளைக் கண்டு மகிழ்தல்
கொழுந்து வெத்தல போடயிலே
கள்ளமனம் துள்ளுதையா.......

• ஊடல் கொண்ட உள்ளம்
கண்டாலும் பேசுதில்லை

(5 புள்ளிகள்)

**ஆ.** **வாழ்க்கை மீது கொண்ட பற்றுறுதி**

• கடவுள் தந்த கைகள் முழுப்படவுண்டு
கடல் கடந்து மீன் பிடிப்போம் - வீண்
கவலையற்று வாழ்ந்திருப்போமே....
(விளக்குதல் வேண்டும்)

(3 புள்ளிகள்)

**தொழில் மீது கொண்ட பற்றுறுதி**

• ஏனைய தொழில்களை விட தமது தொழில் சிறந்தது

- முப்பது நாள் உழைத்து உழைத்து நிறையப்பணம் வாங்கி......

(2 புள்ளிகள்)

(5 + 3 + 2 = 10 புள்ளிகள்)

**வினா இல 07**

**7.** அ. நல்ல மரத்தையும் நச்சு மரத்தையும் உருவகப்படுத்தி வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்களை முன்வைத்தல்.

(4 புள்ளிகள்)

ஆ. • விடயங்களை தொடர்புபடுத்தும் வகையில் சம்பவங்களைத் தொகுத்து கூறல்.
(இளவரசன் - தோழன் - முதியவர் - இளைஞர்)

• திருக்குறட்பாக்களை கையாளுதல்.

• அணிகளைக் கையாளுதல்.

• நல்ல மரம் / நச்சு மரம் } என்ற உருவக அமைப்பு

(6 புள்ளிகள்)
(4 + 6 = 10 புள்ளிகள்)

* * *